புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

===========================================================================

# நற்றிணையில் இறையியல் கூறுகள்

===========================================================================

**கட்டுரையாளர்;**
**முனைவர் க. மகேஸ்வரி,**
*உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,*
*மேலாண்மையியல் புலம் SRM அறிவியல் மற்றும்*
*தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,*
*காட்டாங்குளத்தூர்.*

===========================================================================

**ஆய்வுச்சுருக்கம்:**

*இன்றையச் சமயத்தின் பொருளையோ, அடிப்படையையோ வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களிடம் காண இயலாது என்றும், அக்கால மக்களிடம் தோன்றிய எண்ணங்களே இன்று சமயம் என்று பேருரு கொள்ள அடித்தளமாயின எனலாம். சங்கத் தமிழ் மக்களின் வாழ்க்கையானது வீரம், போர்கள், கொடை, காதல் போன்ற நிலைகளில் மட்டும் அமையாது சமய இறையியல் உணர்வுடன் விளங்கிய போக்கையும் அறியலாம். அக்கால மக்களின் வாழ்க்கையுடன் இறையியல் கூறுகள் பின்னிப் பிணைந்து நின்ற பிணைப்பையும் சங்க இலக்கியம் தெளிவாகக் காட்டுகிறது. இறையியல் உணர்வு மக்களின் வாழ்க்கை முழுவதும் படர்ந்து காண பெற்றது. சங்க இலக்கிய வருணனைகளிருந்தும்,உவமை களிலிருந்தும் இன்ன பிறவிடங்களிலும் இறையியல் தொடர்பான கூறுகளைச் சங்கப்புலவர்கள் சுட்டிச் செல்கின்றனர். சங்க காலத்தில் இறைவனைப் பொருளாகக் கொண்டு பெரும்பாலும் உவமைகளாகத்தான் தெய்வங்கள் இயம்பப் பெற்றுள்ளன. சங்க இலக்கியத்துள் கடவுளைக் குறிக்கும் சொற்களாக இறைவன், கடவுள் படைத்தான் என்பன ஆளப்பெருகின்றன. ஆலமரம், கடம்பமரம், கள்ளி, மா, முதுமரம், வேங்கை போன்ற மரங்கள், ஆறு, காடு, குளம், சந்தி, தூண், நீர்த்துறை வீடு , போன்ற இடங்கள் உரையும் இடங்களாகக் கருதப்படுகின்றன.*

*நற்றிணையில் அகச்சுவை நிரம்பிய பாடல்களில் மக்கள் அறவாழ்வு, மன்னர் கொடை, ஆட்சித்திறம் ஒருமைப்பாடு பழந்தமிழர் பழக்க வழக்கங்கள், உவமைத் திறம், உள்ளுறை இறைச்சிப் பொருள்களின் அமைப்பு முதலியவை காணப்படுகின்றன. நற்றிணையைப் பாடிய பாடல்களின் பாவடித் தொடர்களாலேயே பெயர் பெற்றுள்ளமை*

*சிறப்புக்குரியது ஆகும். எட்டுத்தொகை நூல்களுள் முதன்மையான நற்றிணையில் பொதிந்துள்ள இறையியல் கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரை தலையாய நோக்கமாக கொண்டு அமைகிறது.*

***கலைச்சொற்கள்:***

*இறையியல், வழிபாடு, கொல்லிப்பாவை, கானமர்செல்வி, சூலி, கொற்றவை, கொற்றவை, நெடியோன், ஆலமர், பஞ்சபூதங்கள்.*

***முன்னுரை :***

*தமிழிலுள்ள நூல்களுள் மிகப்பழமை வாய்ந்தவை சங்க இலக்கியங்களாகும். ஏறத்தாழ கி.மு.500 முதல் கி.பி.200 வரையில் விளங்கிய கடைச்சங்கப்புலவர்களால் ஆயிரக்கணக்கான பாடல்கள் பாடப்பெற்றன. அப்பாடல்கள் முழுவதும் கிடைக்கவில்லை. நாட்டின் மூலை குகைகளில் ஒதுங்கியிருந்து, கேட்பாரற்றுக் காவிரி வெள்ளத்திலும் வையைப் பெருக்கிலும், பொருநை ஆற்றிலும் வீசப்பெற்று பல பாடல்கள் சிதைந்து அழிந்தன. கரையானும் தீயும் பல பாடல்களை உண்டன. நல்லறிஞர் சிலர் எஞ்சியிருந்த பாடல்களைத் திரட்டித் தொகுத்தனர். இம்முயற்சியில் ஈடுபட்ட அத்தமிழர்க் காவலர்களுக்கு வேந்தரும் வேளிருமாகிய புரவலர் ஊக்கமூட்டிப் போற்றினர். திரட்டப்பட்ட பாட்டுக்களுள், சிறந்த பாட்டுகளை மட்டும் பொருள் நோக்கிலும், செய்யுள் நோக்கியும் அடிவரையறை கருதியும் வகுத்து அவற்றை எட்டுத் தொகுதிகளாகத் தொகுத்து தொகை என்றும் எண்பெருந்தொகை என்று முறைப்படுத்தினர்.*

*அத்தகைய எட்டுத்தொகை நூல்களுள் முதன்மையான நற்றிணையில் பொதிந்துள்ள இறையியல் கூறுகளை ஆராயும் நோக்கில் இறையியல் விளக்கம், வழிபாடு தோற்றம், தொல்காப்பிய இறையியல் கோட்பாடுகள் தொல்காப்பிய சமய இறையியல் நிலப்பாகுபாடுகள், பண்டைத் தமிழர்களின் இறையியல் வழிபாட்டு நெறிமுறைகள் நற்றிணையில் இறையியல் கூறுகள், போன்றவைகள் ஆராயப்படுகின்றன.*

***இறையியல் விளக்கம்:***

*இறையியல் என்னும் சொல் இறைவன் (கடவுள்) தொடர்பான ஆய்வு என்னும் பொருள் கொண்டது அதைவிடவும் விரிவான பொருளில் சமய நம்பிக்கை சமய சமுக்கம் ஆன்மிகம் சார்ந்த ஆய்வு எனவும் அதை விளக்கலாம்.*

*கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த ‘பொயேத்தியசு’ என்னும் அறிஞர் இறையியல் என்பது மெய்யியலின் ஒரு பகுதி என்று பொருள் கொண்டார். அசையும் பொருள்களைப் பற்றிய ஆய்வு இயற்பியல் என்றால் அசையாப் பொருள் பற்றிய ஆய்வு இறையியல் என்பது அவர் கருத்து, கடவுள் இயற்கைப் பொருள்களைப் போன்று மாற்றங்களுக்கு உட்பட்டவர் அல்லர் என்னும் கருத்தின் அடிப்படையில் அசையாப் பொருள் என்று குறிக்கப்பட்டார்.*

*17 - ஆம் நூற்றாண்டிலிருந்து பொதுவாக சமயம் சார்ந்த கருத்துகளை ஆயும் இயல் இறையியல் என்னும் பொருள்எழுந்தது. இவ்வாறு ‘இயற்கை இறையியல் (natural theory) என்னும் தொடர் எழுந்தது.*

***வழிபாடு தோற்றம்:***

*வழிபாடு என்பது ஒரு தெய்வத்தை நோக்கிய, மத பக்தியின் செயலாகும். ஒரு வழிபாட்டு முறையானது, ஒரு முறைசாரா அல்லது முறையான குழு அல்லது ஒரு*

*நியமிக்கப்பட்ட தலைவரால் எனத் தனித்தனியாக செய்யப்படலாம். தொடக்க காலத்தில் மக்கள் இயற்கையை வழிபட்டனர். அவற்றைக் கடவுளாக நம்பினர்.*

**தொல்காப்பிய இறையியல் கோட்பாடுகள்:**

*பண்டைத் தமிழர் சமய வாழ்வைப் பெருமளவு இலக்கியச் சான்றுகளும் சிறிதளவு தொல்பொருட்சான்றுகளும் உணர்த்துகின்றன. நீண்டதோர் காலப்பகுதியில் படைக்கப் பெற்ற பாடல்களைப் பாட்டிலும், தொகை நூற்களிலும் காணலாம். பண்டைத் தமிழர்களின் நீண்டக்காலத்துச் சமய நம்பிக்கைகளையும் சமய வழக்குகளையும் வழிபாட்டு முறைகளையும் சங்க இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிய முடிகின்றது. இறந்தவர்களை வழிபடுவது தொன்மையான பழக்கமாகும். மனிதனுக்கு ஆத்மா உண்டு. அது இறப்பதில்லை பூத உடல் இறந்த பின்னும் மண்ணுலகில் தொடர்ந்து உலாவுகின்றது. உறவினர்களின் நன்மைகளுக்கு கைமாறு பெற்றுக்கொண்டு துணை நிற்கிறது என்ற சிந்தனை யோட்டத்தின் விளைவே இறந்தோர் வழிபாடாகும். இறந்தோர் பற்றிய கனவுகள் இத்தகைய சிந்தனைகளுக்கு வித்திட்டன. மண்ணுலகத் தேவைகள் இறந்தோருக்குத் தொடர்ந்து இருக்கின்றன என்று நம்பினர். அதனால் தாழியில் பிணம் அடக்கும் போது வாழ் நாளில் பயன்படுத்திய பொருட்களைச் சிறிய கலசங்களில் வைத்துப் புதைத்தனர்.*

- *கல் எடுத்தனர்*
- *நட்ட கல்லை வணங்கினர்*
- *அறுவடைக்குப் பின் சோறு படைத்தனர்.*
- *பொருஞ் சோற்றுப்பதம்*
- *பெரும்பிடி*

*போன்ற விழாக்களை இறந்தோர் நினைவால் மன்னர்கள் பெருமளவில் செய்தனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்துகின்றன. இறந்தோருக்குக் கள் நடுகின்ற மரபு வளர்ந்து நினைவுக்கல் வழிபாடாகவும் வீரக்கல் வழிபாடாகவும் வளர்ந்து மலர்ந்தன. நடுகல் விழாவுக்குத் தொல்காப்பியர் இலக்கணம் வரையறுத்துள்ளார். நடுகற்களைக் குடும்பத்தினரும், சமூகத்தினரும் வழிபட்டனர்.*

**தொல்காப்பிய சமய இறையியல் நிலப்பாகுபாடுகள்:**

*சங்க இலக்கியத்தாலும் தொல்பொருள் சான்றுகளாலும் சங்க காலத்தில் முறைப்படுத்தப்பட்ட சமயத்தின் வளர்ச்சியை அறியலாம். பல்வேறு கடவுளர்களின் பெயர்களையும், வழிபாட்டுமுறைகளையும் பாட்டும், தொகையும் காட்டும் போது தொல்காப்பியர் நானிலக் கடவுளர்களை நிலத்துக்கென முறைப்படுத்திக்காட்டுகிறார். பிற்காலத்தில் சிந்தனையாளர்கள் பரம் பொருளுக்கு ஓரிறை வடிவு அளித்த போது நானிலக்கடவுள் வழிபாட்டின் ஒருமையைக் காட்டி நானிலவடிவன் என்றவாறு நான்முகனாக்கினார். தொல்காப்பியர் தமது இலக்கணத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், ஆகிய நான்கு நிலத்துக்கெனப் பெயர் காட்டிய கடவுளர்கள் முறையே*

i. *சேயோன்*
ii. *மாயோன்*
iii. *வேந்தன்*
iv. *வருணன்*

*போன்றவைகளைக் குறிப்பிடுகிறார்.*

> ***‘மாயோன் மேய காடுறை உலகமும்***
> ***சேயோன் மேய மைவரை உலகமும்***
> ***வேந்தன் மேய தீம்புனல் உலகமும்***
> ***வருணன் மேய பெருமணல் உலகமும்***
> ***முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்***
> ***சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே’***
> ***(தொல்பொருள் : 5)***

*என்பது தொல்காப்பியரின் நானிலச் சமய விளக்கமாகும். இதற்கு உரை வகுத்தார். இந்த நானிலக் கடவுளர்களும் வைதீகத்திலிருந்து தமிழகத்துக்கு வழக்கப்பட்டவை என்றவாறு காட்டினர். வைதீக சமய வரலாற்றைக் கவனித்தால் உரையாசிரியர்கள் தங்களுடைய கணிப்பில் தவறியுள்ளனர் என்பது புலப்படும். இந்து சமயத்திற்கும் கடவுளர்கள் அனைவரும் ஆரியர் வருகைக்கு முற்பட்ட திராவிட இந்தியர்களின் வழிப்பாட்டுஇறைகளும் படிப்படியாக வைதீக சமயத்தில் சேர்க்கப்பட்டவைகளுமாவார்.*

***பண்டைத்தமிழரின் இறையியல் வழிபாட்டு நெறிமுறைகள்:***

*பண்டைத் தமிழர் காடுசார்ந்த முல்லை நிலத்தில் (மேடு) ஆடுமாடுகளை மேய்த்து வாழ்ந்தனர். அவர்களுள் பெரும்பான்மையோர் ஆயர்கள் எனப்பட்டனர். புல்வெளிச் செழிப்பும் நீரும் கால்நடைத் தொழிலை வளப்படுத்த ஆதாரமாயின அவர்கள் திருமாலை வழிபட்டனர் (மால் = மேகம்) திருமாலைத் தொல்காப்பியர் மாயோன் என்றார். கடற்கரையில் வாழ்ந்தவர்களின் வாழ்வு நீரில் நிலைத்திருந்தது அவர்கள் நீர்க்கடவுளை வழிபட்டனர். அதுவே நாராயணன் நாரா +அயனன் = நாராயணன். நாரா – நீர் கடலில் நீண்ட பரப்பைக் குறிக்க நெடியோன் என்றனர். வருணன் என்பதன் பொருளும் நெடியோன் என்பதாகும். வார், நெடுமையைக் குறிக்கும் (நீளமான தோற்பொருள் வார் எனப்படுகிறது) பண்டைத் திராவிடர் பண்பாட்டு மண்டலங்களில் கிடைத்த தொல்பொருள் சான்றுகளின்படி வருணன் திராவிடர்களின் வழிபாட்டிறையும் நீர்த்தொடர்பான கடவுள் ஆவர்.*

*சிவன் திராவிடர்களின் முழுமுதற் கடவுள், சங்க இலக்கியத்தில் சிவன் பிற பல பெயர்களால் அறியப்பட்டான், முக்கட் செல்வன், செஞ்சுடர் கடவுள், ஆலமர் செல்வன், கறைமிடற்றண்ணல், காரியுண்டிக்கடவுள், பிறவாயாக்கைப் பெரியோன், ஏறூர்தியான் போன்ற பெயர்களில் சங்க காலத் தமிழர்கள் சிவனை அறிந்து வழிபட்டனர். பிறையும், உடுக்கையும், முக்கோலும், புலித்தோலும் அவனுடைய இலச்சினைகள் எனக் கொண்டவர். தவக்கோலத்திலும் ஆடும் நிலையிலும் தமிழர்கள் கண்ட சிவன் அவர்களுடைய முக்கிய தெய்வமாகும்.*

*தமிழர்களின் முக்கியமாக கடவுள் என்ற பொருளில் மக்களின் குடியிருப்புகள் அதிகமாகக் கொண்ட மருத நிலத்தைத் தொல்காப்பியர் சிவனுக்கு ஒதுக்கினார். கடவுளர்களுள் தலையாய கடவுள் என்ற பொருளில் தொல்காப்பியர் சிவனை, வேந்தன் என்றார் சிவன் தமிழர்களின் நிலக் கடவுளாக்கப்பட்டுப் பிறை அணிவிக்கப்பட்டான்.*

***நற்றிணையில் இறையியல் கூறுகள்:***

*இந்நூல் ஒன்பது முதல் பன்னிரண்டு அடிவரையுள்ள 400 - அகவற்பாக்களின் தொகுதியாகும். நற்றிணை என்பது திணை எனப்படுகிறது. திணை என்பது சொல்லாகு பெயராய் அகத்திணை நூலைக் குறிக்கிறது. சிறிய பாடல்களுமின்றி பெரிய*

*பாடல்களுமின்றி அளவான பாடல்களைப் பெற்றமையால் இத்திணை நல் என்னும் அடைமொழி பெற்று நற்றிணையாயிற்று என்பர். இந்நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக 400 பாடல்கள் உள்ளமையால் இது நற்றிணை நானூறு எனவும் வழங்கப்படுகிறது. 175 புலவர்களால் பாடப்பெற்ற இந்நூலைத் தொகுபித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன் ஆவான். இந்நூலுக்கு கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். 1914 –இல் நற்றிணையை உரை எழுதிப் பதிப்பித்தவர் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயர் ஆவார். தொல்காப்பியர் நான்கு கடவுளர்களின் பெயர் சுட்டி நாலு நிலத்தில் உறைந்த கடவுள் என்று காட்டியுள்ளனர் என்றாலும் சங்க காலத் தமிழர்களின் சமய வாழ்வில் பிற வழிபாட்டுச் சான்றுகளும் உள்ளன. இதில் முக்கிய இடம் பெற்றிருப்பது தாய்த்தெய்வ வழிபாடாகும். பெண் தெய்வத்தை தாயாகவும், கண்ணியாகவும் கொண்டு வழிப்பட்டுள்ளனர். இறந்தோர் வழிபாட்டுக் கடுத்த நிலையில் மக்களிடத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. தாய்த்தெய்வ வழிபாடாகும். தாய்த்தெய்வத்துக்கு இடத்துக்கிடம் பெயர் மாறுபட்டிருந்தது.*

i. *கொல்லிப்பாவை*
ii. *கானமர் செல்வி*
iii. *சூலி*
iv. *கொற்றவை*
v. *குமரி*

*போன்று பெயர்களிருந்தன. பாலை நிலத்திலும் மலைநாட்டு பகுதியிலும் அச்சமூட்டும் கடவுளாகக்காட்டி வழிபட்டனர். பாலை நிலத்தில் கொற்றவைக்குரிய கோவில்களைக் கோட்டமென்றார். தாய்த்தெய்வ வழிப்பாட்டில் பெண்களே பூசாரித்திகளாக விளங்கினர்.*

*பாலை நிலத்தில் இவர்கள் சாலினிகள் எனப்பட்டனர். இந்தப்பெண் பூசாரித்திகள் ஆயுதமேந்திய கை ஓங்கி, கால் பெயர்ந்து மயிர்சிலிர்க்க வைக்கும் வெறியாட்டமாடினர். நற்றிணையில் கொற்றவை பற்றிய பாடல்கள் பாலை நிலத்தொடர்புடையவையாக கடற்கரை வரையுள்ள பிரவிடங்களும் கொற்றவை வழிபாடிருந்தது என்பதற்கு ஆதாரமுள்ளது. கடற்கரையில் கொற்றவையைக் கடல் கெழு செல்வி என்று வழிபட்டனர். கி.பி.முதல் நூற்றாண்டில் (சங்ககாலத்தின் கடைசிப்பகுதியில்) செங்கடற்பயணம் என்ற நூலின் ஆசிரியர்(பெரிப்புளுஸ்) குமரி முனையில் கன்னித்தெய்வங்களுக்கு ஆலயமிகுந்ததையும் பிற்றைவாழ்வில் கவலை கொண்ட முதியவர்கள் புண்ணியச் செலவு செய்வதையும் நேரில் கண்டு குறிப்பிட்டுள்ளார். கொற்றவையைக் கிராம தெய்வமாக வழிபட்டனர்.*

*சாதாரண மக்கள் நலன் கருதித் தாய்க்கடவுளையும் பிற கடவுளரையும் வழிபட்டுக் கொண்டிருந்தபோது சிந்தனையாளர்கள் (ஞானிகள்) பரம் பொருளில் சிந்தனையைச் செலுத்தித் தத்துவம் வடித்தனர். சிவவழிபாட்டிற்க்கும் சக்தி வழிபாட்டிற்கும் தொடர்பும் நெருக்கமுமிருப்பதைக் கண்டனர். சிவனை அவர்கள் பேரண்டத்தின் ஆத்மாவாகவும் தாய் தெய்வத்தை(சக்தியை) பேரண்டத்தின் ஆற்றலாகவும் கொண்டனர். சக்தியையும் சிவனையும் உருவகப்படுத்தி காட்டியபோது சிவனை வலது பாதியாகவும், சக்தியை இடதுபாதியாகவும் காட்டினர். இந்த மெய் ஞானத்துள் விஞ்ஞானம் புதைந்திருக்கிறது. இந்த அடிப்படையைக் சங்ககாலச் சான்றோர்கள் அறிந்திருந்தனர் என்பதைச் சங்க காலத்துப் பெருந்தேவனார் புறம் முதற்பாடலில் சுட்டுகிறார்.*

*இலிங்க வழிபாடு திராவிடர் சமய வாழ்வுடன் இணைந்து திராவிட பண்பாட்டு மண்டலத்தின் பிறவிடங்களில் கிட்டியதைப் போன்று தமிழகத்திலுள்ள இலிங்க உருவத்தைத் தொல்லாய்வில் கண்டுள்ளனர். சங்க காலத் தமிழர்கள் கந்து, கந்தழி ஆகிய பெயர்களின் வழிபாடு நடத்தினர். அன்று அதற்குப் பொருள் வேறு கடற்கரை பகுதியில்*

*சுறாக் கொம்பை நட்டு வழிபடும் பழக்க மிகுந்தது. சிவவழிபாட்டுடனும்,சக்திவழிபாட்டுடனும், முருக வழிபாட்டுடனும் இவ்வழி இணைந்து காணப்பட்டது. சிவனையும் நாராயணனையும் பெரும் யோகிகளாக முருகனை ஆண்டியாகவும் கூறும் மரபுக்கதைகள் உள்ளன. முற்காலத்தில் யோகத்துடன் கந்து வழிபாடு தொடர்புடையதாக விளங்கியது.*

*சங்ககாலத்தில் அறிவியல் கண்ணோட்டத்தின் பரம்பொருள் பற்றி ஆராய்ந்தவர்களும் இருந்தனர். முதலில் பூத்தவை ஆகாயம், காற்று, நிலமாகிய ஐந்தும் இவை ஐம்பொருள் பூதங்கள் எனப்பட்டனர். ஐம்பூதங்களின் இயல்பை அவர்கள் நன்கு அறிந்தனர். இயற் ஒப்பாய்வில்லாத கடவுளாக வடிவம் அமைத்தனர். அகிலம் தோற்றத்திற்கும் விஞ்ஞான விளக்கம் அளித்தனர்.*

*விஞ்ஞான நோக்கில் சமய விளக்கம் கண்டவர்கள் பொழுதையும் நிலத்தையும் முதற்பொருள் என்றனர். தெய்வம் மனிதன் முதலானவற்றைத் தோன்றும் பொருளாகவும்(கருப்பொருள்) ஒழுக்கத்தை உரிப்பொருளாகவும் வைத்தனர். இவர்களைப் பூதவாதிகள் எனலாம்.*

*ஆகாயம், காற்று, தீ, நீர் நிலம் ஆகிய ஐந்தையும் ஐம்பூதம் என்றனர். இவர்கள் சமயச் சிந்தனைகளுக்கு விஞ்ஞான நோக்கும் வாழ்வியலுக்கு வானியல் நோக்கும் கொண்டனர். காலக்கணிப்புக்கு வானியலை எவ்வாறு பயன்படுத்தினர் என்பதை நாட்பெயரிட்டிருக்கும் பாங்கும் வார, மாத, வருடக்கணக்கிட்டிருக்கும்முறையும் சங்ககால நூலான நற்றிணை எடுத்துக்காட்டுகிறது.*

***'மாநிலம் சேவடி ஆக தூ நீர்***
***வலை நரல் பௌவம் உடுக்கைஆக***
***.........***
***வேத முதல்வன்......(நற்றிணை.கடவுள்வாழ்த்து)'***

*பெரிய நிலத்தை தன் சேவடிகளாகக் கொண்டவன், தூய நீர், சங்குகள் ஒலிக்கும் கடலை ஆடையாகப் பெற்றவன். ஆகாயத்தை உடம்பாக உடையவன், திசைகளைக் கைகளாக ஏற்றவன், பசுமையுடைய கதிர்களைக் கொண்ட நிலவையும், ஞாயிற்றையும் இரண்டு கண்களாக வாய்த்தவன். நிலம் முதலாகிய எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கியவன், வேதாந்தாற் கூறப்படும் முதற்கடவுள். மேற்கண்ட பாடல் விசும்பு, நீலவண்ணம் கூறப்பட்டு எல்லாப் பொருள்களிலும் அவன் தங்கியிருக்கும் தன்மை கூறப்பட்டது.*

***'கீழ் ஏழு உலகமும் அளந்த திருவடி (பரி . 20)***
***ஒன்றணீற் போற்றிய விசும்பு நீயே***
***இரண்டின் உணரும் வழியும் நீயே***
***மூன்றின் உணரும் தீயும் நீயே***
***நான்கின் உணரும் நீரும் நீயே***
***ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே'***
***(பரி 18-22)***

*மேற்கண்ட பாக்கள் ஒப்பு நோக்கத்தக்கது.*

***'அழிவிலர் முயலும் ஆர்வ மாக்கள்***
***வழிபடு தெய்வம் கண் கண்டா அங்கு***
***அலமரல்'......(நற்:9)***

*ஆர்வமுடையவர் தம் வழிபடு தெய்வத்தைக் கண்டு தாம் விரும்பியதைப் பெற்றனர்.*

***‘ஆலநீழல் அசைவு நீக்கி***
***அஞ்சுவழி அஞ்சாது அசைவழி***
***அசைகு வருந்தா தேகுமதி(நற்:76)***

*ஆலநீழல் என்பது குருதட்சிணாமூர்த்தி உரையும் இடமாகும். அக்கடவுளை வழிபட்ட முறைகளையும் அறியலாம்.*

***‘வழிபடு தெய்வம் நின்புரம் காப்பப்***
***பழிதீர் செல்வமொடு வழிவழிசிறந்து***
***பொலிமின் என்னும் புறநிலை***
***வாழ்த்தே’ (தொல்காப்பியம்; 415;1-3)***

*என்னும் சான்றுகளால் தெய்வவழிபாடும் தெய்வத்தை வழிபட்டால் அது தம்மைக்காக்கும் என்ற நம்பிக்கையும் பழந்தமிழர் வாழ்வில் வேரூன்றி இருந்தமையை அறியலாம்.*

***‘செவ்வேர்ப் பலவின் பயங்கொழு***
***கொல்லித்***
***தெய்வம் காக்கும் தீது நீர்***
***நெடுங்கோட்டு......(நற்:201, 5-11)***

*என்றும் பரணர் கூற்று இயற்கையின் வெவ்வேறு சக்திகளின் சீற்றங்களால் அழிவுகள் உண்டானாலும் அது தன் தன்மையில் இருந்து மாறாது என்பதை அறியலாம்.*

***‘..... ஓங்கு திரை***
***முந்நீர் மீமிசைப்பலர் தொழத்***
***தோன்றி***
***ஏமுற விளங்கிய சுடரீனும்***
***(பரிபா:10:129 – 131)***

*மழையற்றுப் போக சூரியனின் வெப்ப சக்தியால் காடுகளும் அழிந்து நிலம் காய்ந்து வெடித்துப்பாலை நிலமாய் மாற உலகம் துன்புற்றது, அது சூரிய வழிபாட்டிற்கு அடித்தளமாயின.*

***‘சூருடைச் சிலம்பில் சுடர்ப்பூ***
***வேய்ந்து***
***தாம் வேண்டுவ உருவில்***
***அணங்குமார் வருமே (சிலம்பு:15:155 -118)***

*இன்றைய சமுதாயத்தில் தீ மிதிப்பதை பூமிதித்தல் என்றே வழங்கி வருகின்றனர். அன்றைய சுடர்ப்பூ என்பதே இன்றைய நெருப்பூ ஆனது தெரிகிறது. மேற்கண்ட வழி அணங்கு, கன்னித் தெய்வ வழிபாடுகளை அறியலாம்.*

***‘அணஙகாடு நின்றது மலை, வான்கொள்க எனக்***
***கடவுள் ஓங்கு வரை பேண்மார்’***
***.........(நற்றிணை:165)***

*இம்மலையில் தெய்வம் தோன்றி நின்றது. மழை பெய்தால் அத்தெய்வத்தின் வீறு தனியுமாகளின் மலையை மழை வந்து சூழ்வதாக என்பதில் கடவுள் நம்பிக்கை, வழிபாட்டு முறைகளும் காணலாம்.*

***‘குறவர் மலைக்குப்பலி கொடுத்தலை,***
***‘மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்***
***மாரியான்று மழை மேக்குயர் கெனக்***
***கடவுட் பேணிய குறவர் மாக்கள் (புறம் 145:1-3)***

*என்னும் பாடல்வழி பழந்தமிழர் நாட்டுப்புற வாழ்வியல் வழிபாட்டு கூறுகளையும் ஒப்பு நோக்கலாம்.*

> **'எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்**
> ***குருகு ஆர்கழனியின்........(நற்:216)***

*குருகுகள் ஆராவாரம் செய்யும் வயர்க்கரையில் அமைந்ததும் கடவுள் நிலை பெற்றதும் ஆகிய வேங்கைமரம் மரவழிபாடு, நம்பிக்கைகளை அறியலாம்.*

**தொகுப்புரை:**

*பொதுவாக சங்க இலக்கியத்துள் சிவபெருமான் ஆலமர் கடவுள், ஆலமர் செல்வன், காஅய்கடவுள், முக்கட் செல்வன், முக்கணான் என வணங்கப்படுகிறார். நீலமணி மிடற்றன், விரிசடைக்கடவுள், பிறைத்திங்கள் அணிந்தவன் எனவும் போற்றப்படுகிறார்.திருமால் கோவலன், நெடியோன், நெடுவேள், நேமியோன், மாயவன், மாயோன், மால் என்றல்லாம் வணக்கப்படுகிறார். காயாம்பூ, முகில், கருமை, வெஞ்சுடர், தாமரை, துளபமாலை, சங்கு, சக்கரம், கருட ஊர்திகள் இன்னபிறவும் சுட்டப்பெருகின்றன.முருகன் செவ்வேள், சேய், நெடுவேள், முருகன், முருகு, வேல், சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவன் என்றும் வணக்கப்படுகிறான் கடம்பமரங்கள், சுட்டப்படுகின்றன.மேலும் இயற்கைத் தெய்வவழிபாடு , கொல்லிப்பாவை வழிபாடு, வையை ஆற்று வழிபாடு, சூரிய வழிபாடு, இயக்கி, தாய்த்தெய்வ வழிபாடு, அணங்கு வழிபாடு, செல்வி வழிபாடு, தவ்வை வழிபாடு, கொற்றவை வழிபாடு, துர்க்கை, காளி வழிபாடு, உமை(மலைமகள்) வழிபாடு, சிவசக்தி, முருகன் மாயோன் இன்ன பிற வழிபாடுகளையும் இறையியல் கூறுகளும் கண்டறியப்பட்டன.*

**துணைநூற்ப்பட்டியல்:**


1) *இராசமாணிக்கம்.மா, தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், தனலெட்சுமி பதிப்பகம் மதுரை – 1974.*
   *Rajamanikkam.Ma, tamilaka varalarum thamilar panpaadum, dhanlakshmi Publishing House Madurai – 1974.*
2) *இலக்குவன்.சி, இலக்கியம் கூறும் தமிழர் வாழ்க்கை, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை – 1962.*
   *Lakshavan.C, ilakkiyam koorum thamilar vazhkkai valluvar, Pudukottai – 1962.*
3) *குன்றக்குடி அடிகளார், சமய இலக்கியம், இந்திய புக் ஹவுஸ் சென்னை – 1981.*
   *Kunrakkudi Adikalar, samaya ilakkiyam, India Book House Chennai – 1981.*
4) *கைலாசபதி.சு, பண்டைத்தமிழர் வாழ்வும், வழிபாடும், மக்கள் வெளியீடு சென்னை.1978.*
   *Kailasapati.su, Pandaithamilar vaazhvum, vazhipaadum makkal veliyidu, Chennai.1978.*
5) *பாலசுப்ரமணியன் .கு.வெ, நற்றிணை (மூலமும் உரையும்) நியூ செஞ்சூரி புக்ஹவுஸ் சென்னை – 2004.*
   *Balasubramanian .G.Ve,narrinai (moolamum uraiyum) New Century Bookhouse Chennai – 2004.*
6) *வாசுதேவன்.கா, பன்முக நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, தேவன் பதிப்பகம், திருச்சி – 2001.*
   *Vasudevan.ka, panmuka nokkil thamil ilakkiya varalaaru, Devan Publishing House, Trichy – 2001.*